1968 பிப்ரவரி 29]

(இ) ஆம் எனில் வெட்டப்பட்ட மரங்கள் எவ்வளவு ரூபாய்க்கு ஏலம் போடப்பட்டன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) வெட்டப்பட்ட 17 மரங்கள் திருநெல்வேலி நகராட்சி மன்றத்தாரால் ரூபாய் 3,333-க்கு ஏலம் விடப்பட்டன.

திரு. ந. தருமலிங்கம் : தலைவர் அவர்களே, பாதையை அகலப் படுத்தும் நோக்கத்தோடு பாதையிலுள்ள மரங்களை வெட்டுவதில் தவறு இல்லை. ஆனால் வேறு இடங்களில் அத்துமீறி மரங்கள் வெட்டப்படு வதைத் தடுக்கும் முறையில் கடும் தண்டனை விதிக்கும் சட்டங்கள் இயற்ற அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஏற்கனவே அப்படிப்பட்ட சட்டங் கள் இருக்கின்றன.

DR. H. V. HANDE : Hon. Speaker, Sir, in a number of places trees are removed. Whether it is Tirunelveli Town or Madras City does not make much difference. Trees are removed because they obstruct the roads. After the trees are removed, will the Government make a very serious effort to plant trees on the extreme sides of the roads so that for twenty or thirty years there will be very good shade ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மரங்கள் அகற்றப்பட்ட பிறகு, சாலை விரிவுபடுத்தப்பட்டபிறகு, அப்பாலுள்ள இடங்களில் மரங்களை நட லாமா என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்கிறார். அப்பாலுள்ள இடங் கள் பெரும்பாலும் கட்டடங்களாகத்தான் இருக்கின்றன. அப்படி கட்ட டங்கள் இல்லாத இடங்களில் மரங்களை நடுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க அரசாங்கம் ஆராயும்.

வேலை நிதி ஊதியம் பெறும் பணியாளர்கள்.

*104 வினா—திரு. என். சங்கரய்யா : } திரு. டி. மார்டின் : } மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) "Work charged" என்ற பெயரில் உள்ள அரசாங்க ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை தற்பொழுது என்ன ?

(இ) இவர்களது வேலை நிலைமைகளை அபிவிருத்தி செய்வதற்கான பரிசீலனையை மேற்கொள்ளும் செயற்குறிப்பு ஏதேனும் அரசாங்கத்திற்கு உள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) துறையின் பல்வேறு பிரிவு களில் பணியாற்றும் வேலை நிதி ஊதியம் பெறுவோரின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

நெடுஞ்சாலை—கிராமப்பணிகள் துறை ..	15,701
பரம்பிக்குளம்-அளியாறு திட்டம்	1,052
பொதுப்பணித்துறை	8,322
மொத்தம் ..	25,075

(இ) வேலை நிதி ஊதியம் பெறும் பணியாளர்களிலே அரசாங்க பணியில் சேர்த்துக்கொள்ளப்பட்ட பணியாளர்கள் (Provincialised) முறையான அரசாங்க பணியாளர்களுக்குச் சமமாக பெரும்பாலும் கருதப்படுவதுடன் கீழ்க்கண்ட நன்மைகளையும் பெற உரிமை உள்ளவர் களாவர் :—

ஆண்டுச் சம்பள உயர்வுடன் கூடிய காலக்கிரம சம்பள ஏற்றமுறை, 1936-ம் ஆண்டு திருத்தியமைத்த தொழில் பணியாளர்கள் விடுப்பு விதிகளின் கீழ் விடுப்பு தற்செயல் விடுப்பு, மருத்துவச் சலுகைகள்

உதவித்தொகையுடன் கூடிய வருங்கால வைப்பு நிதி முதலியன. எனவே அவர்களுடைய ஊழிய நிலைகளைச் சீர்ப்படுத்தும் கேள்வி இப்பொழுது எழுவதற்கில்லை. அரசாங்கப் பணியில் சேர்த்துக்கொள்ளப்பட்ட பணியாளர்களைப் பொறுத்தவரையில் காலி இடங்கள் இருப்பதைப் பொறுத்து அவர்கள் அரசாங்க பணியில் சேர்த்துக்கொள்ளப்பட்ட பணியாளர் தொகுதியில் சேர்க்கப்படுகின்றனர். ஆனால் பணி விரைவில் நிறைவெய்திவிட்டால், இயன்றவரை அவர்கள் பிற திட்டங்களில் வேலையில் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். அவ்வாறு வேலையில் சேர்க்கப்பட இயலாதவர்கள் தொழில் தகராறுகள் சட்டத்தின் கீழ் பெற உரிமையுள்ள நன்மைகளுடன் வேலையிலிருந்து நீக்கப்படுவர்.

THIRU T. MARTIN : May I request the Hon. Minister to state whether any representation has been so far received by the Government from the work-charged establishment employees listing out certain demands and, if so, the steps so far taken by the Government for meeting those demands ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஒர்க் சார்ஜ்டு லேபரர்ஸ்களிடமிருந்து பலவிதமான கோரிக்கைகள் வந்திருக்கின்றன. பணிகளில் 3 வருடம் அனுபவம் உள்ளவர்களுக்கு வேலை உத்திரவாதம் அளிக்கப்படவேண்டுமென்றும், சம்பள விகிதம் எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களுக்கு ரூபாய் 120 லிருந்து 125 அளிக்கப்பட வேண்டுமென்றும் மற்றும் விடுப்பு வசதிகள், பிரயாணப்படி போன்ற வசதிகள் செய்து தரப்பட வேண்டுமென்றும் கோரிக்கைகள் வந்திருக்கின்றன. அரசு அவைகளையெல்லாம் ஆராய்ந்து ஆலோசித்து வருகிறது.

திரு. கோளத்தூர் கோதண்டம் : தலைவர் அவர்களே, "ஒர்க் சார்ஜ்டு" என்ற பெயரில் வேலை பார்த்து ஓய்வு பெற்றவர்கள் இரண்டு ஆண்டுகள், மூன்று ஆண்டுகள் ஆகியும் அவர்களுக்கு இதுவரை கிராஜுவடி போன்ற நன்மைகள் கிடைக்கவில்லை. உடனடியாக கிராஜுவடி கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : சட்டப்படி பெற வேண்டியவர்கள், அப்படிப் பெறாமல் இருந்தால், கனம் உறுப்பினர் எழுதி அனுப்பினால் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. ந. வீராசாமி: தலைவர் அவர்களே, முன்பிருந்த அரசாங்கம் "ஒர்க் சார்ஜ்டு" தொழிலாளிகளில் ஒரே தொழிலைச் செய்பவர்களுக்கு இரண்டு விதமான சம்பள விகிதங்களை வைத்திருந்தார்கள். அதாவது பி. டபள்யூ. டி. ஒர்க்ஷாப்பில் பணி புரியும் ஒர்க் சார்ஜ்டு தொழிலாளிகளும், ஹைவேஸ் ஒர்க்ஷாப்பில் பணிபுரியும் ஒர்க் சார்ஜ்டு தொழிலாளிகளும் ஒரே தொழிலைத்தான் செய்து வருகிறார்கள். ஆனால் அவர்களுக்கு இரண்டு விதமான சம்பள விகிதங்கள் இருக்கின்றன. அதை இந்த அரசாங்கமாவது மாற்றியமைக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே இப்படிப்பட்ட பல்வேறு பிரச்சினைகளையெல்லாம் ஆராய்ந்து அறிக்கை ஒன்றை விரைவிலே அனுப்புமாறு தலைமைப் பொறியாளர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்.

திரு க. மு. ராஜகோபால் : தலைவர் அவர்களே, இந்த பொதுப்பணித் துறையிலே பலபேர் பத்து பதினைந்து ஆண்டுகளாக வேலை பார்த்து வந்தும் இதுவரை அவர்கள் நிரந்தர ஊழியர்களாக நியமிக்கப்படாமல் இருப்பது அரசாங்கத்திற்கு தெரியுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இம்மாதிரியான கேள்விகளைத்தான் மற்ற உறுப்பினர்களும் கேட்டிருக்கிறார்கள். அதைப்பற்றியெல்லாம் குறித்து விவரமான அறிக்கை ஒன்றை அனுப்புமாறு தலைமைப் பொறியாளர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்.

1968 பிப்ரவரி 29]

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, இந்த 25 ஆயிரம் பேரிலே எவ்வளவு பேர்கள் இப்போது மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்? அவர்களை அரசு நிரந்தரமாக எடுத்துக்கொண்டிருக்கிறதா? அல்லது தாற்காலிகமாக எடுத்துக் கொண்டிருக்கிறதா? மற்றவர்களையும் எடுத்துக்கொண்டு ஒரு ராணுவப்படை போல் வைத்து மாகாண ரீதியில் எங்கெங்கு ரோடு போடும் வேலை போன்ற வேலைகளில் அவர்களைப் பயன்படுத்தும் எண்ணம் அரசாங்கத்திற்கு உண்டா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நெடுஞ்சாலை கிராமப்பணிகள் துறையின்கீழ் வேலை செய்யும் 15,701 பேர்களில் 2877 பேர்கள் நிரந்தர ஊழியர்களாக வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றனர். பொதுப் பணித்துறையின்கீழ் வேலை செய்யும் 8,322 பேர்களில் 40 சதவிகிதத்தினர் நிரந்தர ஊழியர்களாக வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றனர்.

திரு. எஸ். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்த ஒர்க் சார்ஜ்டு தொழிலாளிகளிடம் இருக்கின்ற ஒரே குறை, தாங்கள் எந்த நேரத்திலும் வேலையிலிருந்து நீக்கப்பட்டு விடலாம் என்பதுதான். மற்றும் காண்ட்ராக்டர்களிடம் அவர்கள் வேலை வாங்கும்போது காண்ட்ராக்டர்களின் செல்வாக்கு கண்டும் பயப்பட வேண்டியுள்ளது. ஆகையால் தொழிலாளிகள் வேலையிலிருந்து நீக்கப்படமாட்டார்கள் என்ற ஒரு கோரிக்கையையாவது அரசாங்கம் ஏற்று பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : கூடுமான வரையில் ஒரு வேலைத் திட்டம் முடிந்தவுடன், அவர்கள் இன்னொரு வேலைத் திட்டத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றார்கள். ஒரு வேலைத் திட்டம் முடிந்து, இன்னொரு வேலைத் திட்டம் ஆரம்பிப்பதற்குமுள்ள இடைவெளி கொஞ்சம்தான். அப்படிப்பட்ட நிலைமைகள் தோன்றும்போது என்ன செய்யலாம், அவர்களை நிரந்தர ஊழியர்களாக மாற்ற முடியுமா என்பது பற்றியெல்லாம் குறித்து விவரமான அறிக்கை ஒன்றைத் தருமாறு தலைமைப் பொறியாளர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்.

திரு. வ. ஜார்ஜ் : அவைத்தலைவர் அவர்களே, இப்போது ஒர்க் சார்ஜ்டு ஊழியர்களின் சம்பளம் மாநில அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகிறதா? ஒவ்வொரு மாவட்ட அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகிறதா? பல வருடங்களுக்கு முன்னர் இயற்றிய பி.டபிள்யூ.டி. கோடில் பல வருடங்களாகவே தொழிலாளர்களுடைய நலன்கள் பேணப்படவில்லை. அவர்கள் எப்பொழுதுமே மேல் அலுவலர்களின் கீழ் அடிமைகளைப் போல நடத்தப்படுகிற நிலைமை இருக்கிறது. ஆகவே, பி.டபுள்யூ.டி. கோடை தற்கால நிலைமைக்கேற்ப புனர் பரிசீலனை செய்து திருத்தி அமைக்க முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இது அத்தனையும் அந்தத் தொழிலாளர் கோரிக்கைகளின் எதிரொலிதான். நான் முன்பே பதிலளித்தேன், தலைமைப் பொறியாளர் அதைப்பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள் என்று.

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : நிரந்தரமாக்கப்படாமல் 13 வருடங்கள் வேலையில் இருந்த தொழிலாளர்கள் ஒரு வருடம் வேலையின்றி இருந்த பிறகு திரும்பவும் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறார்கள். பத்து வருடம் தொடர்ந்து வேலையில் இருந்தாலே அவர்களுடைய சர்வீசுக்கு உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும். இல்லையென்றாலும் திரும்பவும் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறபோதாவது அவர்களுடைய பழைய சர்வீசையும் சேர்த்துக் கணக்கில் எடுத்துக்கொள்வார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மாண்புமிகு உறுப்பினருடைய இந்த நல்ல யோசனை பரிசீலிக்கப்படும்.

DR. H. V. HANDE : Sir, these Work-charged employees are practically semi-permanent employees. There is also another category of employees who are absolutely temporary employees

Then there are permanent employees. Whenever Work-Charged employees are required, they can be taken from the category of temporary employees but when permanent vacancies are filled up the Work-Charged employees can be taken by transfer. This is one of the long-standing demands of the work-charged employees who have not been made permanent even though they have worked for more than 10 years. So, will this Government give first preference to these Work-charged employees when permanent vacancies are filled up, and thus make a realistic approach to the whole problem and also see that their long-standing grievance is redressed ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அப்படி நிரந்தரமாக எடுக்கிற நேரத்தில் அவர் எத்தனை ஆண்டுக்காலம் பணிபுரிந்திருக்கிறார், அவருடைய தொழில் திறன் என்ன என்றெல்லாம் பார்த்துத்தான் நிரந்தரமாக்கப்படுகிறது. மாண்புமிகு அங்கத்தினருடைய நல்ல யோசனையையும் தலைமைப் பொறியாளர் ஆய்வார்கள்.

திரு. பி. துரைராஜ் : நெடுஞ்சாலைப் போக்குவரத்தில் வேலை செய்கின்ற ஊழியர்கள் தினசரி பேருந்து வண்டிகளினால் பாதிக்கப்படுகிற ஆபத்தான நிலையில் பணி புரிகிறார்கள். அவர்களையாவது நிரந்தரமாக்க இந்த அரசாங்கம் முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : சாலைகளில் வேலைசெய்கிறபோது பேருந்து வண்டிகளினால் எப்படி ஆபத்து வரும் என்று தெரியவில்லை. வேலை நடக்கிற இடங்களில் அவை மிக மெள்ளத்தான் போக முடியும்.

திரு. முனு ஆதி : தலைவர் அவர்களே, இந்த ஊழியர்களுக்கு நடு நடுவே வேலை இல்லாமல் இருக்கிற நிலையையே மாற்றுவதற்கு ஒரு வேலையையும் காண்டிராக்ட்டுக்கு விடாமல் பி.டபிள்யூ.டி.-யிலேயே எல்லா வேலைகளையும் செய்வதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அது முற்றிலும் இயலாத காரியம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : அரசினர் சிக்கன நடவடிக்கையின் காரணமாக இந்த ஊழியர்களில் எத்தனை பேர்கள் வேலையிழந்து இருக்கின்றனர் என்று சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ருசிகரமான பதிலைக் கொடுப்பதற்கில்லை. காரணம் அதிகமான பேர்கள் வேலை இழக்கவில்லை.

ரசாயன உரங்களின் விலைகள்.

*105 வினா—**திரு. எஸ். ஜே. ராமசாமி :**
திரு. கே. விநாயகம் : } மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

இந்த ஆண்டு ரசாயன உரம், யூரியா, அமோனியம் சல்பேட் ஆகிய வற்றின் விலையை மத்திய அரசு கூடுதல் செய்ததை தடுக்க நமது மாநில அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : ரசாயன உரங்களின் விலை உயர்வு குடியானவர்களைக் கடுமையாகப் பாதிக்கும் என்கிற நமது கருத்து இந்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு. கே. விநாயகம் : முன்பு, அதாவது இப்போது ஆட்சி செய்கிற கட்சி பதவிக்கு வந்தபோது என்ன விலை இருந்தது ? இப்போது உரங்களின் விலையை எந்த அளவுக்கு உயர்த்தியிருக்கிறார்கள் ? இந்த அரசு